# தேவன் இருக்கிறாரா?: தேவன் இருக்கிறார் என்பதை பற்றிய விவாதம் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பேர்க் நிகழ்ச்சியில், தேவன் இருக்கிறார் என்பதை நம்ப முடியாதபடி ஜனங்களுக்கு இருக்கும் மிகபெரிய தடை என்ன? பலருடைய கருத்து தீமைகளும் உபத்திரவமும் இருக்கிறதால் உண்டாகும் பிரச்சனை என்கின்றனர், அன்பு நிறைந்தவரும் சர்வ வல்லமையும் கொண்ட தேவன் எப்படி, இந்த உலகத்தில் தீவினையையும் உபத்திரவத்தையும் அனுமதித்தார்?

இன்றைக்கு எனது விருந்தினர், இந்த பிரச்சனையின் உணர்வுபூர்வமான மற்றும் அறிவுபூர்வமான இரண்டு விதத்திலும் பதில் அளிக்கிறார், அவர்தான் சித்தாந்த மேதை Dr. வில்லியம் லேன் கிரேக், இவர்தான் நமது தலைமுறையின் சிறந்த கிறிஸ்தவ சித்தாந்த மேதையாக கருதபடுகிறார். Dr. கிரேக் இங்கிலார்ந்தின் பிர்மின்கம் பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தில் Ph. D. பெற்றிருக்கிறார்; மேலும் முனிச் பல்கலைகழகத்தில் இறையியலில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். இந்த நிகழ்ச்சியில் எங்களோடு இணைந்துகொள்ளுங்கள் இது ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றையை நிகழ்ச்சியில் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்தவ தேவனை விசுவாசியாதபடி பலரை விளக்கி வைத்திருக்கும் மிக முக்கியமான கேள்விகளில் இதுதான் முதன்மையான கேள்வியாக நிற்கிறது. அதுதான் தீவினை மற்றும் உபத்திரவத்தை பற்றி சர்ச்சை. அது எப்படி இருக்கிறதென்றால்: எப்படி அன்பு நிறைந்தவரும் சர்வ வல்லமையும் உடைய தேவன், இந்த உலகத்தில் தீமையையும் உபத்திரவத்தையும் அனுமதிக்க முடியும்? இன்றைக்கு எனது விருந்தினர் உலகில் சிறந்த சித்தாந்த மேதையான, Dr. வில்லியம் லேன் கிரேக். சரி, Dr கிரேக், இந்த கேள்விக்கு நீங்க எப்படி பதில் தருவீங்க?

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்:**.இந்த கேள்வியை பொறுத்தவரையில், ஜான், இதுல முக்கியமானது என்னவென்று கேட்டால் நா சொல்றமாதிரி தீமையின் அறிவுபூர்வமான பிரச்சனை மற்றும் தீமையின் உணர்ச்சி பூர்வமான பிரச்சனை இவை இரண்டையும் வேறுபடுத்தி பார்க்கணும். அறிவுபூர்வமான பிரச்சனை என்பது தேவன் இருக்கிறார் என்பதற்கும் இந்த உலகில் உபத்திரவங்கள் உண்டு என்பதற்கும் சரியான அளவு விளக்கத்தை கொடுத்து எப்படி என்பதை கூற வேண்டும். உணர்ச்சிபூர்வமான

பிரச்சனையில் ஜனங்களுடைய விருப்பு வெறுப்புகளை எப்படி சமாளிப்பது தேவன் எப்படி இதை அனுமதிக்கிறார் எதற்காக சிலரை பாடுகளுக்கு உட்படுத்துகிறார் என்பதை கூறுகிறது. இந்த புரிந்துகொள்ளுதல் மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறேன், ஏன்னா உணர்ச்சி பூர்வமாக தீவினையால் பாதித்தவர்களுக்கு இதற்க்கான பதில் கரிசனை அற்றது போலவும் வெறுமையானதாக தோன்றிட வாய்ப்பிருக்கிறது. இன்னொரு பக்கத்தில், உணர்ச்சி பூரவமான பிரச்சனைக்கான பதில் அசாதாரனமானதாகவும் சித்தாந்தத்தில் பொருந்த கூடாததாகவும் சித்தாந்த ரீதியான கேள்விகளோடு இருப்பவர்களுக்கு தோன்றிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே என்னை பொறுத்தவரை அநேகர் இதை உணர்ச்சி பூர்வமான பிரச்சனையாகதான் பார்க்கிறார்கள், இதை அறிவுபூர்வமான பிரச்சனையாக பார்ப்பதில்லை. ஆனால் இவை இரண்டுமே முக்கியம்தான், ஏன்னா அறிவு நிலைதான் பிரச்சனை என்று மக்கள் நினைக்கிறார்கள். அந்த பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்றால் முதலில், அந்த பிரச்சனையின் வேரை நான் அடைய வேண்டும், அதுதான் உணர்ச்சிபூர்வமான பிரட்சனை.

**ஆன்கர்பெர்க்:** அப்படின்னா அறிவுபூர்வமான பிரச்சனையில் இருந்து துவங்கிடலாம்.

**கிரேக்**:.இந்த அறிவுபூர்வமான பிரச்சனையும் இரண்டு விதங்களில் வருகிறது. அதை பிரித்து பார்க்கவேண்டியது அவசியம். நிலையான தன்மை மற்றும் சாத்தியகூறு நிறைந்த நிலை. இந்த பிரச்சனையின் லாஜிகல் நிலையானது தேவன் இருக்கிறார் என்றால் தீவினை இருக்க சாத்தியமில்லை என்று கூறுகிறது. அவை எதிர்க்கமுடியாத வல்லமை அசைக்க முடியாத காரியங்கள் என்கிறது. ஒன்று இருந்தால், மற்றொன்று இருக்க முடியாது. அப்படின்னா தீவினையும் உபத்திரவமும் இருக்கிறதால், தேவன் இருக்க வாய்ப்பில்லை என்று கூறுகிறது. இதற்கு எதிராக, சாத்தியகூறின் நிலை கூறுகிறது, சரி, தேவன் இருப்பதும் தீவினை இருப்பதும் சாத்தியமாகும் என்கிறது ஆல்ரைட், அதை பற்றி பார்க்கலாம். ஆனா இருந்தாலும், இது நம்பகூடாததாக இருக்கிறது. இந்த உலகத்தில் தீவினையையும் உபத்திரவத்தையும் அனுமதித்து, தேவனும் இருக்கிறார் என்பது நம்பத்தகுந்தது அல்ல.

**ஆன்கர்பெர்க்:** சரி. முதல் காரியத்தை பார்க்கலாம்.

**கிரேக்**:.தீமையை குறித்த பிரச்சனையின் லாஜிகல் நிலை கூறுகிறது என்னவென்றால் இந்த இரண்டு நிலைகளுமே ஒன்றுகொன்று முரண்பாடாக இருக்கிறதாக கூறுகிறது. அன்பு நிறைந்த, சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கிறார், தீவினையும் இருக்கிறது. ஒருவேளை தீவினையும் உபத்திரவமும் இருக்குமென்றால், அதை

தொடர்ந்து சர்வ வல்லமையுள்ள, அன்பு நிறைந்த தேவன் இருக்க முடியாது. அதுதான் தீமையை குறித்து சொல்லும்போது எழுகிற லாஜிகல் நிலையாக இருக்கிறது. இந்த நிலையில் இருக்கும் பிரச்சனையானது, ஜான், இந்த இரண்டு நிலைகளுக்கும் இருக்கிற வேறுபாடுகளை இதுவரை ஒருவராலும் எடுத்து சொல்ல முடியாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒன்றுக்கு ஒன்று மறுப்பு தெரிவிக்கிறது. அதனால், இந்த இரண்டு நிலைகளுக்கு மாறுதலாக இருக்கிறது என்று நாத்திகர்கள் கூறும்போது, அவர்கள் இரண்டும் மாற்றுகருத்தோடு இருக்கிறது நம்பத்தகுந்தது என்றிடுவர். ஏன்னா அவை இரண்டும் பூரணமற்ற நிலையில் இல்லையே. ஆனா இந்த விஷயத்தில் அவர்கள் இந்த மாற்றுகருத்துகளுக்கு பின்னால் அடங்கியிருக்கும் மர்மத்தை வெளிப்படுத்தி விளக்கமாக கூறிட முயன்றிடுவார்கள். இது கடினம் என்னன்னா ஒரு நாத்திகர் கூட, ஒரு சித்தாந்த மேதைகூட, இந்த மாற்று கருத்துகளுக்கு பின்னால் இருக்கும் மர்மத்தை வெளிப்படுத்தி அதை விளக்கி கூறும் நிலையை தன்மையை வெற்றிகரமாக அடையவில்லை.

**ஆன்கர்பெர்க்:** பில், இன்னும் ஒருபடி மேல பொய் தேவன் இருக்கிறார் என்பதும் தீவினை இருக்கிறது என்பதும் லாஜிகலாக பொருந்தும் என்பதை நிருபிக்கலாம் என்று சொன்னீர்கள். இந்த உலகத்தில் அதை எப்படி நிரூபிக்க முடியும்?

கிரேக்:.சரி, இவை இரண்டும் இருக்க முடியும் என்பதை நிரூபிக்க நாத்திகர்கள் தவறிவிட்டார்கள், இவை இரண்டும் சாத்தியப்படும் என்று நாம் காண்பிக்க முடியும். என்ன செய்யவேண்டும் என்றால் இதனோடு இன்னொரு உண்மையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் அதாவது சர்வ வல்லமையும் சர்வத்தையும் அறிந்த தேவன் இருப்பதன் விளைவாக தீமையும் இருக்கிறது. இந்த உதாரணத்தை கவனியுங்கள். தீமையையும் உபத்திரவத்தையும் அனுமதிக்க தேவனிடம் நேர்மையான காரணங்கள் இருக்கிறது. இந்த கருத்து எவ்வளவு உண்மையாக இருக்கிறதோ, அவ்வளவாக தேவன் இருக்கிறார் என்பதற்கு தீவினை மற்றும் உபத்திரவம் இருக்கிறது என்பதற்கும் எந்த இடையூறும் இல்லை என்கிறது. ஆகவே நாத்திகர்களுக்கு இந்த உலகத்தில் தீவினையையும் உபத்திரவத்தையும் அனுமதிக்க பல நீதியான காரணங்கள் இருக்கிறது என்பதை நிருபித்து காட்டுவது மிகப்பெரிய பாரமாக நிற்கிறது. ஆகவே எந்த நாத்திகரும் இதுவரை அந்த நிருபனத்தின் பாரத்தை இறக்கி வைத்திருப்பதாக தெரியவில்லை. ஆகவேதான் இன்றைக்கு நேயர்களுக்கு நான் இதை சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன் அதாவது எல்லா சித்தாந்தவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது, நாத்திக சித்தாந்தர்களும் ஒப்புகொள்கிறார்கள், அதாவது தீவினையை குறித்த இந்த லாஜிகல் நிலை முழுவதும் நிரூபிக்க பட்டிருக்கிறது. அதனால இந்த பிரட்சனையை குறித்த சர்ச்சை கிடப்பில் போடப்பட்டது. தேவன் இருக்கிறார் என்பதற்கு,

உலகில் தீமையும் உபத்திரவமும் இருக்கிறது என்பதற்குமான லாஜிகல் மாறுபாடுகளுக்கு என்று ஒன்றுமே இல்லை.

**ஆன்கர்பெர்க்:** சரி. நேயர்களே ஏன் நாத்திகர்கள் இந்த முடிவிற்கு வந்தார்கள் அதற்கான காரணங்களை பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா, அப்படிப்பட்டவர்கள் உங்க புத்தகத்தை வாசித்தார் போதும் ரீசனபில் பெயித் அதில் எல்லாம் இருக்கிறது, அதுவே போதுமானது தான். ஆனால் இந்த பிரச்சனையை இன்னும் ஆழ்ந்து கவனிக்கலாம். தீவினையின் சாத்தியகூறு என்ற பிரச்சனை. இது ஏன் இன்னும் அதிக கடினமா இருக்கிறது?

**கிரேக்**:.ஆமா. சரி, ஏன்னா இதனுடைய தீர்வு கொஞ்சம் நவீனமானதாகும். நவீன முறையில் சொல்லும்போது அதை நிரூபிப்பது சுலபமாகியது. இந்த பிரச்சனை சொல்கிறது: ஆல்ரைட், ஆள்ரடி, தேவனும் தீமையும் இருப்பது லாஜிகலா சாத்தியம்தான், ஆனா அது நம்பக்கூடியதாக இல்லையே. இந்த உலகத்தில் இருக்கும் உபத்திரவங்களின் ஆழத்தையும் தன்மையையும் பார்க்கும்போது, சர்வ வல்லமையும் சகல அன்பும் நிறைந்த தேவன் இருக்கிறார் என்பதை நம்ப முடியவில்லையே.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், பில், இந்த உலகத்தில் தீவினையும் உபத்திரவமும் இருந்தாலும் தேவன் இருக்கிறார் என்பது நம்ப கூடாத

காரியமல்ல என்பதை விளக்கும் மூன்று காரணங்களை வைத்திருக்கிறீர்கள்.

கிரேக்:.ஆமா. இதுவரைக்கும் இந்த உலகத்தில் இருக்கும் தீவினையும் உபத்திரமும் தேவன் இருக்கிறார் என்பதை நம்பகூடாததாக செய்கிறது என்பதை நிரூபிக்கும் அந்த பாரத்தை தாங்க முடியாமல் இருக்கிறார்கள். இதை செய்யமுடையாததற்கு முதல் காரணம் என்னவென்றால் நாம் உலகில் பார்க்கிற தீமைகள் இல்லாமல் இருக்கும் அளவிற்கு தேவன் நீதிநெறியை தவறி இருக்கிறார் என்று சொல்வதற்கு போதுமான காரணங்களோ அதற்கு தகுதியுடைய நபர்களாகவோ இருப்பதற்கு நமக்கு தைரியம் இல்லை. தனிநபர்களாக நமக்கு, அறிவுக்கு சில அளவு இருக்கிறது, நமது உட்கருத்து, காலம் சமயத்திற்கு எல்லை இருக்கிறது. ஒருவேளை இந்த பூமியில் தீவினைகளையும் உபத்திரவத்தையும் தேவன் தான் அனுமதிக்கிறார் என்பதை நம்முடைய சிந்திக்கும் ஆற்றலின் நிலைக்குள் பொருந்தாமல் இருக்கலாம். தேவன் ஒவ்வொருன்றையும் அதின் துவக்கம் முதல் முடிவு வரைக்கும் பார்க்க கூடிய காலங்களுக்கு அப்பாற்பட்டவர் அவர் தனது தரிசனப்படி முடிவிற்கான நிகழ்வுகளை சம்பவிக்க செய்கிறார். மேலும் தேவன் நம்முடைய இந்த எல்லைகளுக்கு உட்பட்ட சிந்தைக்குஏற்றார் போல தீமைகளையும் உபத்திரவத்தையும் அனுமதித்த காரணம் இதுவாக இருக்கலாம் ஆனால் அது

இப்போதிலிருந்து அடுத்த நூறு ஆண்டுகளின் சரித்திரத்தை பாதிக்காது; வேறு எந்த நாடுகளிலும் இருக்கமுடியாது.

மனித சரித்திரத்தில் நிகழும் ஒவ்வொரு சம்பவமும், அது எப்படி இருந்தாலும் சரி, கால சமயங்களுக்குள் அடங்கியிருப்பவர்களுக்கு இதுவரை கண்டிராத விளைவுகளை உண்டாக்கி சரித்திரத்தில் முற்றிலும் மாறுபட்ட தாக்கங்களை உருவாக்குவதாக இருந்திடும். இதற்கு ஒரு உதாரணத்தை பார்க்கலாம், கேயோஸ் கொள்கை இப்போது நவீன அறிவியலில் அபரிவிதமான வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது, விஞ்ஞானிகள் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கு பட்டாம்பூச்சி சிறகடித்திடும் வேகத்தில் நடந்துகொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள், ஆப்ரிக்காவின் காடுகளின் மத்தியில் இருந்தாலும் சரி, நிலையான வேகத்தில் செயல்படும்போது அட்லாண்டிக் பெருங்கடலில் சூறாவளியை உண்டாக்கும் அளவிற்கு வேகம் அதிகரித்துகொண்டிருக்கிறது. இதுவரைக்கும் இந்த சின்ன பட்டாம்பூச்சியால் இந்த விளைவுகளை எடுத்து கூறும் பங்கிருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. சரி, அதேமாதிரி அப்பாவியான ஒருவனுடைய கொலை, அல்லது இரத்த புற்றுநோயால் மரிக்கும் சிறுபிள்ளை, இவர்களும் சரித்திரத்தில் ஒரு தாக்கத்தை உண்டாக்குகிறார்கள். எனவே, இந்த காரியங்களை தேவன் அனுமதிப்பதர்க்கான காரணங்களை நம்முடைய வாழ்நாட்களுக்குள் பொறுத்த முடியாது, அதனால் என்ன நடக்கும் என்ற முடிவை

நம்மால் ஒருகாலும் புரிந்து அறிந்துகொள்ள முடியும் என்று சொல்ல இடமில்லை.

ஆகவே மனிதர்களின் வரலாற்றில் தேவன் செய்திருக்கும் காரியங்களை பார்க்கும்போதும் அவருடைய தரிசனப்படி மனிதர்களை தன்னுடைய வழியில் நடக்கும்படி இந்த உலகத்தை நடத்துவதும், இதையெல்லாம் பார்க்கும்போது தேவன் இந்த உலகத்தில் தீவினைகளையும்  உபத்திரவத்தையும் அனுமதித்ததற்கு நீதியான காரணங்கள் இருக்க முடியும் என்பது நம்பகூடாத விஷயம் என்று தைரியமாக நம்மால் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை இல்லாத நிலை உண்டாகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, இந்த உலகத்தில் தீவினையுன் உபத்திரவமும் இருகிறது தேவனும் இருக்கிறார் என்று சொல்வது நம்பகூடாத விஷயம் அல்ல என்பதற்கு இரண்டாவது காரணம் வேதாகம உபதேசங்களில் தீமை இருக்கிறது என்று சொல்லக்கூடிய காரியங்கள் இருக்கிறது என்றீர்கள். இதை எப்படி ஒப்பிடுவீர்கள்?

**கிரேக்**:.கிறிஸ்தவ விசுவாசமானது கிறிஸ்த தேவன் இருக்கிறார் என்றால் இந்த உலகத்தில் நிச்சயம் தீமையும் இருக்க வாய்ப்பிருக்கிறது என்பதான உபதேசங்களை கொண்டிருக்கிறது. அதனால் கிறிஸ்தவத்தில் தீமை உபத்திரவம் என்பது ஆச்சரியமான காரியங்களாக காணப்படவில்லை என்று கூறுகிறது.சரி, இந்த

உபதேசங்கள் என்னது? சரி, முதலாவதாக வாழ்வின் நோக்கம் மனிதன் இந்த வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதல்ல, மாறாக தேவனை பற்றிய அறிவை பெற வேண்டும். உபத்திரம் என்ற பிரச்சனை ஏன் கடுமையாக இருக்கிறது என்று கேட்டால் அதற்கு காரணம் தேவன் இருக்கிறார் என்றால் நம்முடைய வாழ்வின் நோக்கம் நான் இந்த பூமியில் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தானே இருக்கும் என்ற எண்ணம் உண்டாகிறது. தேவனுடைய பங்கு என்னவென்றால் அவருடைய செல்லங்கலான மனிதர்கள் சவுகரியமாக இருந்து செழிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் இது தவறாகும். நாம் தேவனுடைய செல்ல பிராணிகள் அல்ல.

**ஆன்கர்பெர்க்:** ஆமா.

**கிரேக்**:.வாழ்க்கையின் நோக்கம் இந்த உலகத்தில் மனிதர்கள் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதல்ல, தேவனை அறிகிற அறிவை பெற வேண்டும் அதுதான் நிறைவான சந்தோஷத்தையும் பூரணமான நிலையையும் உண்டாக்கிடும். ஆகவே இந்த வாழ்க்கையில் உண்டாகும் பலவித போராட்டங்கள் மனிதனுக்குள் ஒருவேளை சந்தோஷத்தை உண்டாக்காமல் இருக்கலாம், ஆனா அவை அனைத்தும் நிச்சயம் இன்னும் அதிகமாக தேவனை பற்றி அறிந்துகொள்ள வழி வகுப்பதாக இருக்கிறது. அதனால் ஒன்று

தெளிவாக புரிகிறது உலகில் இந்த உபத்திரவங்கள் தீமைகள் மூலம், தேவன் இவைகளை பயன்படுத்தி இன்னும் ஜனங்கள் அவரை அறிகிற அறிவில் ஆழமாக வளரும்படி செய்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** சரி. இரண்டாவது காரணம் வேதாகம காரணங்கள், என்று கூறுகிறீர்கள், தேவனுக்கும் அவருடைய நோக்கத்திற்கும் மனிதன் எதிர்த்து நிற்கிற நிலையில் இருக்கிறார்.

**கிரேக்**:.நிச்சயமா. மனுக்குலம் தேவனுக்கு விரோதமாக ஆவிக்குரிய நிலையில் எதிர்த்து நிற்கிறது. அவன் தேவனுடைய நீதிநெறிகளை தகர்க்கிறான், அவன் தன்னை அநீதிக்குள்ளும் இழிவான காரியங்களுக்குள்ளும் உட்படுத்தி கொள்ளுகிறான். இந்த உலகத்தில் மனிதனுக்கு விரோதமாக மனிதன் நடந்துகொள்ளும் மனுஷத்தன்மை அற்ற சுபாவங்கள் அனைத்தும் மனித நீதிநெறிகளை விட்டு அகன்று தேவனை விட்டு ஆவிக்குரிய நிலையில் தள்ளப்பட்டு இருப்பதற்கு அடையாளமாக இருக்கிறது. வேதம் கூறுகிறது இதை தடுத்து நிறுத்த தேவன் முற்படுவதே இல்லை. மனிதர்களுடைய சுபாவப்படி நடக்க அவர் அனுமதிக்கிறார். இவை அனைத்தும் தேவனுடைய மன்னிப்பும் சுத்திகரிப்பும் அவர் அளிக்கும் இரட்சிப்பும் நமக்கு அவசியம் தேவை என்ற  நிலைக்கு நம்மை நடத்துகிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. அப்ப வேதத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் உலகத்தில் தீமைகள் இருப்பதை கண்டு ஆச்சரியமடைவது இல்லை.

**கிரேக்**:.நிச்சயமா இல்ல. இதற்கு மாறாக, கிறிஸ்தவர்கள் அதை எதிர்பார்க்கிறார்கள், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு தூரமாக தள்ளப்பட்டிருக்கும் நிலையில் காணப்படுகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்து மூன்றாவது வேதாக உபதேசம் தேவனை பற்றிய அறிவு நித்திய வாழ்வு வரை கொண்டுசெல்கிறது, அதுதான் மிகவும் முக்கியமானது.

**கிரேக்**:.ரொம்பவே முக்கியமான ஒன்றாகும். இந்த வாழ்க்கை அப்படியே முடியாது. வேதாகமத்தின் கண்ணோட்டப்படி, இந்த வாழ்க்கையில் நெருக்கமான பாதைதான் நம்மை தேவனுடைய நித்தியத்தில் அவரோடு பந்தியில் அமரும்படி நடத்தி செல்கிறது. தைரியமாகவும் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து இந்த உலகத்தில் உபத்திரவத்தை சகித்தவர்கள் அனைவரும் ஆண்டு சென்ற பிறகு, தங்கள் வாழ்க்கையை அவர்கள் திரும்பி பார்த்து நிச்சயம் சொல்ல முடியும் இதை கடந்துவந்தது, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான முறைகள், இருந்தாலும் நல்லதுதான் அதன்மூலமாக பரலோகத்தில் இருக்கும் சந்தோசம் ஆனந்தத்திற்கு ஒப்ப்பிடும்போது ஒன்றுமே இல்லை என்பார்கள்.

நீங்க யோசித்து பாருங்க அப்போஸ்தலனாகிய பவுல் மிகுந்த உபத்திரவத்தை அனுபவிப்பவராக இருந்தார். இருந்தாலும் அவரால இப்படி சொல்ல முடிந்தது, “ஆனபடியினாலே நாங்கள்

சோர்ந்துபோகிறதில்லை. அதிசீக்கிரத்தில் நீங்கும் இந்த லேசான உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகளை அல்ல காணப்படாதவைகளையே நோக்கியிருக்கிறோம். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்."

பவுல் கற்பனை செய்து, பார்க்கிறார், அதாவது ஒரு தராசில் இந்த ஜீவியத்தில் உண்டாகும் உபத்திராம் அவமானங்களை ஒரு பக்கத்திலும் மறுபக்கத்தில் தேவன் தமது பிள்ளைகளுக்கு பரலோகத்தில் வைத்திருக்கும் மகிமையையும் வைத்து அளவிடுகிறார். அவர் இரண்டையும் ஒப்பிடும்போது இந்த உலகத்தில் அனுபவிக்கும் உபத்திரவங்கள் தேவனுடைய மகிமைக்கு ஒப்பிடத்தக்கவை அல்ல என்று கூறுகிறார். இதை சிந்தித்து பாருங்கள்; தேவனுடைய நித்தியத்தில் எவ்வளவாய் நேரம் செலவிடுகிரோமோ, அவ்வளவாய் இந்த உலகத்தின் உபத்திரவங்கள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அது சீக்கிரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கிடும். அதனாலதான் பவுல் இதை அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரம் என்கிறார். கடினமான உபத்திரவங்களை அனுபவிப்பவர்களை பற்றி பவுல் கரிசனை இல்லாமல் இல்லை; மாறாக, அவர்களில் ஒருவனாக இருந்தால். ஆனால் நித்தியத்தின் ஒளியில் அவர் ஒன்றை புரிந்துகொண்டார், இந்த உபத்திரவங்கள் தேவன் தம்முடைய

பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் பலரோக மகிமைக்கும் ஆசீர்வாதத்திற்கும் சந்தோஷத்திற்கும் ஒப்பிடதகவைகள் அல்ல.

**ஆன்கர்பெர்க்:** நான்காவது வேதாகம காரணம் தேவனை அறிகிற அறிவு, அதாவது, அது அளவிடமுடியாத அளவிற்கு நன்மையானது. அதை விளக்கிடுங்கள்.

**கிரேக்**:.இதையும் பவுல் தான் கூறியிருக்கிறார் இப்ப நா சொன்ன வேத பகுதியில் சொல்கிறார். இந்த ஜீவியத்தில் நாம் படும்பாடுகள் நாம் பரலோகத்தில் பெறப்போகிற ஆசீர்வதத்தோடு ஒப்பிட கூடியவை அல்ல என்கிறார். தேவனை அறிவது, சகல நன்மைக்கும் அன்பிற்கும் காரணர் அவர்; அவரை அளவிடமுடியாத நன்மைகள் நிறைந்தவர்; இந்த உலகத்தின் பாடுகளோடு அவற்றை ஒப்பிட முடியாது. ஆகவே தேவனை அறிந்திருக்கும் நபர், அவர் எவ்வளவு பாடுபட்டாலும் சரி, அவருடைய வேதனை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, அவனால் நிச்சயம் சொல்ல முடியும், “ தேவன் எனக்கு நல்லவராக இருக்கிறார், ஏன்னா அவன் தேவனை அறிந்திருக்கிறான், அளவிடமுடியாத நன்மைகள் உண்டு.

இந்த நான்கு கிறிஸ்தவ உபதேசங்கள், உண்மையானால், இவை தேவன் இருக்கிறார் என்ற கருத்தை நிராகரிக்க முயலுகிற நிலையை உடைய காரியமாகிய இந்த உலகத்தில் தீமையும் உபத்திரவமும் இருப்பதால் அது சாத்தியமல்ல என்ற கருத்தை தகர்க்கிறது. அதனால

இந்த உலகத்தில் உபத்திரவமும் தீமையும் இருப்பதால் அது கிறிஸ்தவ தேவன் இல்லை என்ற கருத்து சாத்தியமற்றது அல்ல என்கிறது. மாறாக, கிறிஸ்தவ தேவன் இருக்கிறார் என்ற உண்மை இன்றைக்கு உலகில் நாம் காண்கிற அனைத்து விதமான தீமைகளும் உபத்திரவங்களும் அவர் இருக்கிறார் என்பதை நிருபிக்கிறதென்று நினைக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், பில், இப்ப தலைப்பை மாற்றிடலாம் நாம ஒரு விஷயத்தை குறிப்பாக பார்க்கலாம் மூன்றாவது காரணத்தை பற்றி சொல்லுங்க தேவன் இருக்கிறார் அவர் தீமையை அனுமதித்திருக்கிறார் என்பதற்கு சாத்தியகூறு இருக்கிறது அதற்கு நிலையான ஆதாரங்கள் இருப்பதாக சொன்னீர்கள்.

**கிரேக்**:.நிச்சயமா. தேவன் இருக்கிறார் என்பது நம்பக்கூடியது அல்ல என்று நாத்திகர்கள் சொல்லும்போது, நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும், நம்பகூடாத நிலை எதோடு இணைந்திருக்கிறது? அதாவது, சாத்தியகூறுகள் அனைத்திற்கும் ஒரு பின்னணி இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. உதாரணமாக,  சுவின் ஒரு இளம் சுவீடிஷ் வாலிபன் என்று வைத்துகொள்வோம், மேலும் தொண்ணூறு சதவிகித சுவீடிஷ் வாலிபர்கள் ஸ்கை டைவிங் செய்வார்கள். அப்ப, இந்த பின்னனிய தகவலை வைத்து பார்த்தால், சுவினும் சிறந்த ஸ்கையர் என்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனா இப்ப, இன்னும் கூடுதலான

தகவல்களை சேகரிக்கிறோம் என்று வைத்துகொள்வோம் சுவின் இரண்டு வெட்டு காயமுடையவர், மேலும் 95சதவிகிதம் வெட்டு காயங்கள் உடைவர்கள் ஸ்கை டைவ் செய்யமாட்டார்கள். சரி, இப்ப, இந்த புதிய தகவலின் அடிப்படையில் பார்க்கும்போது, சுவின் ஸ்கை செய்வது நம்பமுடியாத ஒன்றாக இருக்கிறது. அப்ப ஒருவர் இப்படியாக கேட்டார்கள்: "தேவன் இருக்கிறார் என்பது நம்பமுடியாத ஒன்று. நீங்க உடனே கேட்கனும், எதனால அதை நம்பமுடியாது என்கிறீர்கள்? இந்த உலகத்தில் காணப்படும் தீமை மற்றும் உபத்திரவத்திநாலா? சரி, இதைதான் நீங்கள் பின்னணி தகவல்களாக பெற்றிருந்தால், தேவன் இருக்கிறார் என்பது நம்பகூடிய ஒன்றாக இல்லை என்ற உங்களுடைய கருத்து ஏற்ப்புடையதாக இருக்கும். ஆனால் இப்ப கேள்வி அது கிடையாது, அப்படிதானே? இதில் சுவாரசயமான கேள்வி என்னவென்றால், கொடுப்பட்ட தகவலின் முழுமையான நிலையை வைத்து பார்த்தால், தேவன் இருக்கிறார் என்பது சாத்தியமாகுமா? தேவன் இருக்கிறார் என்பதற்கான காரணங்கள் தகவல்களை நீங்கள் ஒன்றிணைத்து பார்க்கும்போது உறுதியாக சொல்லுவேன் தேவன் இருக்கிறார் என்பது சாத்தியமான ஒன்றுதான் என்பீர்கள், அவர் இருக்கிறார் என்பதை நம்பகூடாதபடி இந்த உலகத்தில் உபத்திரவங்களும் தீமைகளும் இருக்கிறது என்ற கருத்தை நிராகரித்திடுவீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க சொன்ன விஷயத்தை ஆதரிக்கும் பல தகவல்கள் இருக்கிறது என்று நீங்க சொல்லியிருக்கீங்க. அதை பற்றி கொஞ்சம் சொல்லுங்க.

கிரேக்:.என்னுடைய விவாதங்கள் மற்றும் கட்டுரைகளில் தேவன் இருக்கிறார் என்பதை ஆதரிக்கும் பல விவாதங்களை பெற்றிருக்கிறேன். உதாரணமாக, ஏன் இந்த பிரபஞ்சம் உண்டானது என்பதற்கு  தேவன் தான் சிறந்த விளக்கமாக இருக்கிறார் என நினைக்கிறேன். வேறு எதுவுமே கிடையாது. பிரபஞ்சத்தின் அளவிடக்கூடிய கடந்த காலங்களை பற்றி விளக்கி சொல்ல சிறந்த நபர் தேவன் தான் என்று நான் நம்புகிறேன். நுன்னரிவாற்றளுடன் இந்த பிரபஞ்சத்தை உருவாக்கிய வைத்திருக்கும் விளக்கத்தை அளிக்க சிறந்த நபர் தேவன் தான். இந்த உலகத்தில் நீதிநெரியான நிலைகள் இருப்பதற்கான விளக்கத்தை அளிக்க கூடியவர் தேன் தான் என நினைகிறேன். இயேசுவின் வாழ்க்கை மரணம் உயிர்த்தெழுதலை பற்றிய வரலாற்று உண்மைகளை தெளிவாக விளக்கி கூறக்கூடிய ஒரே நபர் தியன் என்று நான் விவாதித்திடுவேன். ஆகவே பின்னிணை பற்றிய அனைத்து தகவல்களையும் சேகரிக்கும்போது, அந்த விவாதங்கள் அனைத்தும் தேவன் இருக்கிறார் என்பது சாத்தியம் என்றிடும், ஒருவேளை தேவன் இருக்கிறார் என்ற கருத்தை குலைகும்படி உபத்திரவமும் தீமையும் நிறைந்திருக்கிறது என்று

சொன்னாலும் பரவாயில்லை. இவை அனைத்தும் தீமையை குறித்த சர்ச்சையை எடுத்துசொல்வதாக இருக்கும் அதை தவிர மறுபக்கத்தில் எந்த காரியமும் இல்லை. ஆனால், உண்மையில், தீமை மற்றும் உபத்திரம் இருக்கிறது என்பதன் விளைவாக சொல்லப்படும் காரியங்களை சாத்தியக்கூற்றை தகர்த்து அளவுகோலின் அடுத்த பகுதியில் தேவன் இருப்பது உண்மை என்பதை நிருபிக்கும் நிலையான ஆதாரங்கள் இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** சரி. பில், உங்களுடைய புத்தகங்கள் ஒன்றில் திகைக்க வைக்கும் வரியை குறிப்பிட்டிருக்கிறீர்கள், அதாவது தீமையை குறித்த சர்ச்சை தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. அதை விளக்கிடுங்கள்.

கிரேக்:.இது நா ஏற்க்கனவே சொன்ன விவாதத்தோடு இணைந்திருக்கும் ஒன்றும், இந்த உலகத்தில் நீதிநெரியான நிலைகள் இருப்பதற்கு சிறந்த விளக்கம் தேவன் தான். தேவன் இல்லை என்றால் நன்மை தீமை என்று நிலையான இரு தரம் இருக்காது, அப்படின்னா நீதிநெரியான முறை என்று ஒன்றும் இருக்காது. இவை அனைத்தும் உயிரியல் பரிணாம வளர்ச்சியாலும் சமூக நிலைகளாலும் நமக்குள் தோன்றிய சில கருத்துகள் என்று சொல்வார்கள். அதை வைத்து சில விவாதங்களை நடத்த முடியும். உதாரணம் ஒன்று, தேவன் இல்லை என்று சொன்னால், நீதிநெரியான நிலைகள் உண்டாகியிருக்காது.

அநேக நாத்திகர்கள் இதை ஒப்புகொள்கிறார்கள். இரண்டாவது காரியம்: தீமை இருக்கிறது. இதையும் நாத்திகர்கள் ஏற்றுகொள்கிறார்கள். மூன்றாவது: ஆகவே நீதிநெரியான நிலை இப்போது இல்லை, அதாவது, சில விஷயங்கள் தீமையாக இருக்கிறது. அதிலிருந்து தோன்றுவதுதான், நான்காவது: ஆகவே, தேவன் இருக்கிறார். சரி, நம்பமுடியாத ஒன்று, தீமையின் தாக்கம் ஒரு கட்டத்தில் தேவன் இருக்கிறாரா என்ற கேள்வியில் கொண்டுபோய் நிறுத்துகிறது, சித்தாந்த முறை நிலையில் தீமையானது தேவன் இருக்கிறார் என்பதன் ஆதாரமாக இருக்கிறது, ஏன்னா தேவன் இல்லை என்று சொன்னால், நன்மை தீமை என்று இருக்க வாய்ப்பில்லையே.

**ஆன்கர்பெர்க்:** பில், ஒரு விஷயம் ரொம்ப முக்கியமானது உணர்ச்சி பூர்வமான தீமையை குறித்த பிரச்சனையை பற்றி கிறிஸ்தவ விசுவாசம் ஏதோ சொல்கிறது என்பதை ஜனங்கள் புரிந்துகொள்வது அவசியம் தானே.

**கிரேக்**:.கண்டிப்பாக. உபத்திரவத்தின் விளைவாக உணர்ச்சி பூர்வமாக பாதிக்கப்பட்டு அசவுகரியமா இருப்பவர்களுக்கு நிச்சயமா இந்த அறிவுபூர்வமான பிரச்சனைகளை பற்றி சொன்னால் அவர்களுக்கு அது எந்த பலனையும் கொடுக்க முடியாது. கேள்வி என்னவென்றால், தீமையை குறித்த உணர்ச்சி பூர்வமான பிரச்சனைகளை குறித்து கிறிஸ்த விசுவாசம் சொல்வதற்கு ஏதாவது இருக்கிறது? நிச்சயமாக

இருக்கிறதென்று நினைக்கிறன், ஜான். ஏன்னா தேவன் ஏதோ தனித்து ஒதுங்கி நிற்கும் சிருஷ்டிகர் அல்ல என்று கூறுகிறது, இந்த பிரபஞ்சத்திற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லாதாது போல ஒதுங்கி நிற்ப்பவர் அல்ல. மாறாக, நம்முடைய உபத்திரவங்களையும் வேதனைகளையும் நம்மோடு பகிர்ந்து கொள்ளும் அன்பின் பரலோக தந்தையாக இருக்கிறார். உண்மையில், இயேசு கிறிஸ்து என்ற நபராக, மனிதனுடைய சரித்திரத்திற்குள் நுழைந்து நம்மோடும் நமது உபத்திரவத்தோடும் பாவத்தோடும் அவர் அடையாளப்படுத்தப்பட்டார்.

ஆல்வின் ப்லாண்டிங்கா, இன்றைய உலகின் மிக சிறந்த சித்ததாந்த மேதை அவர், இந்த பிரச்சனையை குறித்து அவர் எழுதிய விஷயம்: "கிறிஸ்தவர்களின் பார்வைப்படி, தேவன் அமைதியாக நின்றுகொண்டிருப்பதில்லை, தனது சிருஷ்டிப்புகளின் உபத்திரவத்தை பார்த்து ரசித்து கொண்டிருப்பவர் அல்ல. அவரும் இணைந்து நமது உபத்திரவங்களை பகிர்ந்துகொள்கிறார். தமது குமாரனுடைய வியாகுலத்தை கண்டு அவரும் வியாகுலப்பட்டார், திருத்துவத்தின் இரண்டாம் நபர் அவர், மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டு அவமானமாப்படுத்தப்பட்டு சிலுவையில் கொல்லப்பட்டார். நமது உலகத்தை தாக்கின தீமையை பாவத்தை மரணத்தை மேற்க்கொள்ளும்படியாக கிறிஸ்து தாமே நரகத்தின் உபத்திரவத்தை ஏற்றுகொள்ள ஆயத்தமாக வந்தார், அதினால் நாம் கற்பனை செய்யமுடியாத அதிக மகிமையான வாழ்வை பெற்றிட செய்தார். எந்த

விதத்திலும் நாம் பரிகாரம் செய்யமுடியாத நமது பாவங்களுக்காக அவர் உபத்திரவத்தை அனுபவிக்க ஆயத்தமானார்."

அதாவது, சிலுவையில் கிறிஸ்து நம்மால் ஈடுகட்ட முடியாத சுமக்க முடியாத உபத்திரவத்தை தம்மீது ஏற்றுகொண்டார். இந்த முழு உலகத்தினுடைய தண்டனையை அவரே ஏற்றுகொண்டார். ஆகவே தீமையின் உணர்ச்சிபூர்வமான பிரச்சனையை யோசிக்கும்போது, என்னை பொறுத்தவரை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை தியானித்தால், அவர் என்னை நேசித்தபடியால் எனக்காக விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டதை நினைத்தால், அது எனக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் அளித்து நான் அவரோடு மகிமையில் எடுத்துகொள்ளப்படும்வரை இந்த வாழ்வில் அவருடைய சிலுவையை சுமந்து செல்ல அழைக்கிற அழைப்பை ஏற்று நடக்க உதவிடும்.

**ஆன்கர்பெர்க்:** தங்களுடைய வாழ்வில் தீவினைகளையும் சரீர பிரச்சனைகளை சந்தித்து அதினால் நொறுக்கப்பட்டு இருப்பவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள், தங்களின் பிரியமானவர்களை இழந்து, தவிப்பவர்களுக்கு உற்சாகமூட்டும் விதமாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**கிரேக்**:.கிறிஸ்துவின் காயங்களை அவர்கள் தியானிக்கும்படி உற்சாகப்படுத்துகிறேன், உங்களை தேவனிடம் சேர்ப்பதற்காக அவர்

அனுபவித்த உபத்திரவத்தையும் பாடுகளையும் சிந்தித்து பாருங்கள். அவை அவர் உங்களை சுமக்கும்படி சொல்லுகிற சிலுவையை சுமந்து நடக்க தேவனையான பலத்தையும் தைரியத்தையும் அளித்து உங்களை நடத்திட உதவிடும். உதாரணமாக ஜோனி எரிக்சன் டாடாவை எடுத்துகொள்ளுங்கள், அநேகர் அவரால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். தனது பதினேழு வயதில் நீச்சியலில் ஏற்ப்பட்ட விபத்தினால் முடமானவர்கள் இப்போது அவர்களுக்கு நாற்பத்தி ஐந்து வயது செயல்படமுடியாமல், மார்பக புற்றுநோயுடன், வேதனையில் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் சிறந்த கிறிஸ்தவர், தேவன் அறிந்ததால் நன்றி செலுத்துகிறார்கள், அவர் அனுபவிக்கிற இக்கட்டான உபத்திரவங்கள் மத்தியிலும் கனிதரும் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலிருந்து நாமும் நமது உபத்திரவங்களின் மத்தியில் மீட்பின் நோக்கத்தை அறிந்து தேவனுடைய நன்மையை விசுவாசித்து அவரோடு நித்திய வீட்டில் சேரும்வரை விடாமல் ஓடி, கற்பனைகளுக்கு எட்டாத அந்த அனந்த பாக்கியத்தை அனுபவித்திட ஆயத்தமாவோம்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, இன்றைய நிகழ்ச்சியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் என நம்புகிறேன், தேவன் உங்கள் மேல் கரிசனையோடு இருக்கிறார் உங்கள் வாழ்வில் அவர் இடைபடுகிறவராக இருக்கிறார் நீங்கள் அவரை நோக்கி கூப்பிட்டால்

அவர் உங்களுக்கு உதவிட ஆயத்தமாக இருக்கிறார். அடுத்த வாரம் இன்னும் சில முக்கிய கேள்விகளை பார்க்க இருக்கிறோம்: இயேசு யார்? நான்கு சுவிசேஷங்களிலும் அவர் சொல்வதாக கூறப்பட்டுள்ளவைகளை அவர்தான் சொன்னார் என்று எப்படி தெரியும்? மிக முக்கியமான நிகழ்ச்சி; தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

@2015 A.T.R.I.